

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தாலுக்கா

# 69-சாத்தனூர்

# திருமூலநாயனார் திருக்கோயில்

## ஏழாம் ஆண்டு குருபூஜை அழைப்பிதழ்

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென் உச்சி
அடிமன்ன வைத்தபிரான்மூல னாகின்ற அங்கணனே
-நம்பியாண்டார் நம்பிகள்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே
திருமந்திரம் 139

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே
திருமந்திரம் 252

அன்புடையீர்! வணக்கம்.

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" கயிலை மலையிலிருந்து வந்த சிவமுனி பொதிகை மலையில் அகத்திய முனிவரை சந்திக்க சென்றபோது சோழநாட்டில் காவேரிக் கரையில் மூலன் என்னும் பசுமேய்ப்பவன் உடலில் புகுந்து **திருமூலராக** அவதரித்த அற்புதத் தலம் **சாத்தனூர்.**

திருமூலர் திருவாவடுதுறை திருக்கோயிலில் படர் அரச மரத்தின் கீழ் சிவயோகத்திலிருந்து அருளிய 3000 அருந்தமிழ்ப்பாடல்கள் "**திருமந்திரம்**" என்னும் அற்புத தோத்திர சாத்திர நூலாகும். திருமந்திரத்தில் இல்லாதது வேறு எந்த நூலிலும் காண இயலாது. சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையாக திருமந்திரம் போற்றப்படுகிறது.

தஞ்சை மாவட்டம், ஆடுதுறையை அடுத்துள்ள 69-சாத்தனூர் கிராமத்தில் திருமூலர் திருமந்திர பெருமன்றம் மற்றும் அறுபத்து மூவர் நற்பணி மன்றமும் இணைந்து

சீர்வளர் சீர் **திருவாவடுதுறை குரு மகா சன்னிதானம்** அவர்கள்
சீர்வளர் சீர் **தருமபுரம் குரு மகா சன்னிதானம்** அவர்கள்
சீர்வளர் சீர் **சூரியனார்கோயில் குரு மகா சன்னிதானம்** அவர்கள்
சீர்வளர் சீர் **திருப்பனந்தாள் எஜமான் சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ ஸ்ரீ **விட்டல்தாஸ் மஹராஜ்** அவர்கள் விட்டல் ருக்மிணி ஸம்ஸ்தான், கோவிந்தபுரம்.

ஆகிய சிவனருட் சீலர்களின் அருளாசியுடன் சென்ற 2009-ம் ஆண்டு திருமூலருக்கு ஒரு அருமையான ஆலயம் எழுப்பி கும்பாபிஷேகம் செய்து தினசரி வழிபாடு மற்றும் திருவிழாக்களை நடத்தி வருகின்றனர்.

நிகழும் ஸ்ரீ மன்மத வருடம் ஐப்பசி மாதம் 10ம் தேதி (27-10-2015) செவ்வாய்க்கிழமை அசுபதி திருநாள் அன்று கணபதி ஹோமம், சிறப்பு வேள்வி, அபிஷேகம் மற்றும் அலங்காரம், உற்சவர் திருவீதி உலா ஆகிய வைபவங்கள் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி விமர்சையாக நடைபெற உள்ளன. அதுசமயம் மேற்படி **சைவத் திருமடங்களின் சீர்வளர் சீர் ஆதீனகர்த்தர்கள்** விழாவில் கலந்துகொண்டு அருளாசி வழங்க இருக்கிறார்கள். சிவனேய செல்வர்கள் மற்றும் அன்பர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு திருவருளும், குருவருளும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

27-10-2015 செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| காலை 8.00 மணி முதல் | திருமந்திரம் முற்றோதல் |
| காலை 8.15 மணி | திருமந்திர இசை - ஆலவாய் அண்ணல் அறக்கட்டளை, மதுரை. |
| காலை 10.00 மணி | கணபதி ஹோமம் |
| காலை 11.00 மணி | மாணவர்கள் திருமந்திர பாடல்கள் ஒப்பித்தல் போட்டி மற்றும் பரிசளித்தல் |
| காலை 11.30 மணி | அபிஷேக ஆராதனைகள் |
| பகல் 12.00 மணி | மாகேஸ்வர பூசை |
| பகல் 12.30 மணி | அன்னதானம் |
| மாலை 4.00மணி | உற்சவர் திருவீதி உலா |

இங்ஙனம்,

**திருமூலர் திருமந்திரப் பெருமன்றம்**
**மற்றும் கிராமவாசிகள்,**
69 - சாத்தனூர்.

ஆதரவு : **திருமூலர் அறக்கட்டளை, சென்னை.**
www.tiirumular.com

தொடர்புக்கு.....
Dr. R. **மகாதேவன்,** சென்னை
செல்: 98409 29729.
M. **சந்திரசேகரன்,** 69-சாத்தனூர்
செல்: 94444 31691.

**பஸ் ரூட் :**

கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் **ஆடுதுறையிலிருந்து** கிழக்கே 3 கி.மீ. தொலைவில்